ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1937/20 - 2015 ඔක්තෝබර් මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.10.22
1937/20 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மேல் மாகாண மாகாண சபையின் பொருட்கள் அடகுபிடிப்பாளர்களின் நியதிச் சட்டம்*

மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பொருட்கள் அடகுபிடிப்பாளர்களின் நியதிச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், பொருளாதார ஊக்குவிப்பு, மின்சாரம் மற்றும் எரிசக்தி, சுற்றாடல் அலுவல்கள், நீர் விநியோகம் மற்றும் நீர் வடிகாலமைப்பு மற்றும் உல்லாச அலுவல்கள் தொடர்பான அமைச்சர் எதிரிசிங்க ஆரச்சிகே இசுர தேவப்பிரிய தர்மசேன பெரேரா ஆகிய நான் மேற்குறிப்பிட்ட நியதிச் சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய கீழ் குறிப்பிடப்படும் வழிமுறைகள் இதனால் விதிக்கப்படுகின்றது. இவ்வழிமுறைகள் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் தினத்தில் இருந்து அமுலுக்கு வரவேண்டும்.

எதிரிசிங்க ஆரச்சிகே இசுர தேவப்பிரிய தர்மசேன பெரேரா,
முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், பொருளாதார ஊக்குவிப்பு, மின்சாரம் மற்றும் எரிசக்தி, சுற்றாடல் அலுவல்கள், நீர் விநியோகம் மற்றும் நீர் வடிகாலமைப்பு மற்றும் உல்லாச அலுவல்கள் தொடர்பான அமைச்சரும்
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
"சிராவஸ்தி மந்திரிய",
கொழும்பு 07,
2015, ஒற்றோபர் 16.

### வழிமுறைகள்

1. இவ்வழிமுறைகள் மேல் மாகாணத்தின் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பொருட்கள் அடகுபிடிப்பாளர்களின் வழிமுறைகள் என குறிப்பிடப்படும்.

2. இந்நியதிச் சட்டத்தின் 7(3) மற்றும் 9 (2) உப பிரிவுகளின் கீழ் பொருட்களை அடகுபிடிப்பாளர்களின் வியாபாரம் ஒன்றினை கொண்டு நடாத்துவதற்காக கீழ் காட்டப்படும் கட்டணங்களும் பணமும் அதற்குரிய விடயங்களிற்காக செலுத்தப்பட வேண்டும்.

| விடயம் | | கட்டணம் மற்றும் பணப்பெறுமதி |
|---|---|---|
| (அ) | அடகுபிடிப்பாளர்களின் வியாபாரத்தினை பதிவு செய்தல் | 25,000 |
| (ஆ) | அடகுபிடிப்பாளர்களின் வியாபாரத்திற்கான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,000 |
| (இ) | அடகுபிடிப்பாளர்களின் வியாபாரத்தினை கொண்டு நடாத்துவதற்காக வைக்கவேண்டிய பிணை வைப்புத் தொகை | 1,00,000 |

3. பிணை வைப்புத் தொகை மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய அரச வங்கிகளில் மாத்திரம் வைப்புச் செய்யப்பட வேண்டும்.

11- 130


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.